சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 17.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | சதீஷ் |
| தந்தை பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | லோட்மேன் |
| வயது | : | 38 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் லோட்மேன் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இருவரும் உடையார் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அ.சா-1 சூரியா என்பரை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து

தெருவில் குடியிருந்து வருகிறார். அ.சா-1 பறையன் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 16.05.2020 ஆம் தேதி மாலை 4 மணி அளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு மலையூர் குடியான தெரு வழியாக வந்துக்கொண்டிருந்தேன். அப்போது அ.சா-1 சூரியா மற்றும் அவரது அம்மாவான அ.சா-2 சுமதியும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அருகில் போய் பார்த்தேன். அ.சா-1க்கு முகத்தில் காயம் இருந்தது. உடனடியாக நான் அவரை அங்கு இருந்து அழைத்துக்கொண்டு திருவாரூரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்தேன். அதன் பின்னர் இரண்டு நாட்கள் பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.17 17:33:44 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.